**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No. 265/2025** |
| Prosecution witness | : | P.W.1 |
| Name | : | ராமதாஸ் |
| Father's /Husband Name | : | பொன்னுசாமி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 14th day of May 2026.
A1 to A3present.

**சாட்சி மனுவின் பேரில் குவிமுச 311 ன் கீழ் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாள் அன்று யார் என்னை தாக்கினார்கள் என்று தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்தும் போலீசார் சொல்லி கொடுத்ததன் பேரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் திட்டவும், தாக்கவும், கொலை மிரட்டல் விடுக்கவும் இல்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளுடன் நான் சமாதானம் ஆகிவிட்டேன் என்றால் சரிதான். சமாதான மனுவில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதான். **அந்த கையொப்பம் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 பிரிவின் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் வழக்கு கோப்பின் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும் எதிரிகளும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றாலும் எனக்கு பழக்கமானவர்கள் என்றாலும் சரிதான். நான் முதல் விசாரணையில் சாட்சியமளித்த பிறகு தான் நீதமன்றத்திற்கு வெளியே ஊர் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் சாமாதனம் செய்துகொண்டேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளுக்காக தான் எதிரிகளுடன் சமாதானம் ஆனேன் என்றால் சரிதான். தற்போது சமாதானம் ஆனதால் எதிரிகளுக்கு ஆதரவாக குறுக்கு விசாரணையில் சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.14 17:30:54 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`